17.10.2024

O.S.No. 22/2014

பி.வா.சா.1.திரு. சோழராஜன் த.பெ.வீரணன்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1மற்றும் 2 வாதிகள் தரப்பு குறுக்கு** விசாரணை

1. தாவா சொத்துக்கள் வாதிகளின் பூர்வீக சொத்துக்கள் என்றால் சரிதான். வழக்கு விவரங்களை நான் வழக்கறிஞரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். அதை தெரிந்து கொண்டுதான் எனது தரப்பில் நான் எதிர் வழக்குரை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். 20.11.1934ம் தேதிய உயில் ஆவணப்படி தாவா சொத்துக்கள் ஆதியில் வீரணன் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, நான் கிரையம் பெற்ற போது மேற்படி உயில் ஆவணத்தினை பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா முறையாக வில்லங்கம் சரிபார்த்து வாங்கினாரா என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தாத்தா வில்லங்கம் பார்த்ததாக தாவா சொத்திற்கான வில்லங்க சான்றிதழை எதையும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் தர்ம காரியங்கள் செய்வதற்காக வீரணன் என்பவரால் எழுதி வைக்கப்பட்ட உயில் சொத்துக்கள் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

2. ஆண் வாரிசுகள் மட்டும் தான் தாவா சொத்துககளை அனுபவிக்க வேண்டும் என்றும், பந்த பிராதினம் எதுவும் செய்யக்கூடாது என்றும் வீரணன் உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் எனது தாத்தா கிரையம் வாங்கியதால் எனக்கு அதை பற்றி தெரியாது. எனது தாத்தா காலத்திற்கு பின்பு தாவா சொத்துக்கள் ஆதியில் யாருககு பாத்தியப்பட்டது, எவ்வாறு எனது தாத்தா கிரையம் பெற்றார் என்று நான் தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. மேற்படி உயில் எழுதி வைத்த வீரணனின் மகன் கருப்பையா வாரிசுகள்தான் 1, 5, 7 வாதிகள் என்றால் சரிதான். 5ம் வாதி வழக்கு நிலுவையில் இருந்த போது இறந்துபோய்விட்டதால் அவரது வாரிசுகள்தான் 8 முதல் 12 வாதிகள் என்றால் சரிதான். வீரணன் வா.சா.ஆ-1 உயில் ஆவணம் எழுதிய பின்பு 08.01.1935ல் காலமாகிவிட்டார் என்ற சங்கதியை இந்த வழக்கில் நான் தெரிந்துகொண்டேன் என்றால் சரிதான். மேற்படி வீரணன் இறந்த பின்பு வா.சா.ஆ-1 உயில் ஆவணம் ஊர்ஜிதத்திற்கு வந்து விட்டது என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல, சொத்து அவர்களிடத்தில் இல்லை.

3. இந்த வழக்கில் மேற்படி உயில் சொத்தினை வாதிகளிடம் ஒப்படைக்க வேண்டிதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ-1 உயில் சாசனப்படி தாவா சர்வே எண்.400/7ல் உள்ள சொத்தில் இறந்து போன வீரணனுக்கு அவரது மகன் கருப்பையா சமாதி கட்டி வைத்துள்ளார் என்றால் சரிதான். இறந்து போன வீரணன் மார்கழி மாதம் அவிட்ட நட்சத்திரத்தில் இறந்துபோனார் என்று இந்த வழக்கு சங்கதியை பார்த்து நான் தெரிந்து கொண்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ-1 உயில் சாசனப்படி இறந்துபோன வீரணனின் சமாதி அவரது நினைவு தினமாக வருடா வருடம்

மார்கழி மாதம் அவிட்ட நட்சத்திரம் அன்று அவரது வாரிசுதாரர்கள் குருபூஜை நடத்தி பரதேசிகளுக்கு அன்னதானம் கொடுத்து ரூபாய்10./-க்கு குறைவில்லாமல் தர்ம காரியங்கள் செய்து வருகிறார்கள் என்றால் அவ்வாறு யாரும் செய்யவில்லை, அதை பற்றி இது வரைக்கும் எனக்கு தெரியாது. எனக்கு தற்போது 56 வயது ஆகிறது. நான் பிறப்பதற்கு முன்பு வாதிகள் வகையறா தர்ம காரியங்கள் செய்து வந்தார்களா என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. நாளது தேதியில் உள்ள நடைமுறைப்படி 1934ல் கூறியவாறு ரூபாய்.10/-க்கு குறையில்லாமல் இன்றைய கால கட்டத்திற்கு தகுந்தவாறு வாதிகள் வகையறா இறந்து போன வீரணனின் சமாதியில் அவரது நினைவு நாளன்று வருடா வருடம் தர்ம காரியங்கள் செய்து வருகீறார்கள் என்றாலும், அதை மறுத்து இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. வருடா வருடம் வீரணனின் நினைவு நாள் எப்போது வருகிறது என்று எனக்கு தெரியாது என்பதால் வீரணின் வாரிசுதார்கள் வா.சா.ஆ-1 உயிலில் கண்டபடி தர்ம காரியங்கள் நடத்தவில்லை என்று நான் கூறுவது பொய்யான சங்கதி என்றால் சரியல்ல. நான் பிறந்தது முதல் தற்போது வரை வீரணனின் இறந்த தினமாக மார்கழி மாதம் அவிட்ட நட்சத்திரம் அன்று சர்வே எண்.400/7ல் உள்ள வீரணனின் சமாதியில் வருடா வருடம் நான் அங்கு இருந்தேன் என்று காண்பிப்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்பதால் வாதிகள் அந்த சொத்தில் வீரணனின் நினைவு நாளன்று தர்ம காரியம் செய்யவில்லை என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

5. வாதிகள் வருடா வருடம் 100 பரதேசிகளுக்கு குறைவில்லாமல் அன்னதானம் செய்து வருகீறார்கள் என்றால் சரியல்ல. தர்ம காரியங்கள் வருடா வருடம் வாதிகள் நடத்தி வருவதனை தெரிந்து கொண்டு இந்த வழக்கிற்காக நான் பொய்யாக அதை மறுக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு விவரம் தெரிந்து தர்ம காரியங்கள் நடைபெறவில்லை, 2014ம் ஆண்டு மட்டும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக தர்ம காரியங்கள் நடத்தினார்கள். தாவா சொத்துக்கள் டிரஸ்ட் சொத்துக்கள் என்பதால் வாதிகளுக்கு சாதமாக இந்த வழக்கு முடிவடையும் என்பதாலும், வாதிகள் தர்ம காரியங்கள் நடத்தவில்லை என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. 24.06.1992ல் வீரணன் மகன் கருப்பையாவும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். கருப்பையா காலம் வரை அவரும் அவருக்கு பின்னிட்டு அவரது வாரிசுதாரர்களும் மேற்கூறியவாறு தர்ம காரியங்கள் செய்து வருகீறார்கள் என்றால் சரியல்ல.

6. 04.01.2014ம் ஆண்டு இந்த வழக்கு தாக்கல் செய்யும் முன்பு வீரணனின் இறந்த தினமாக மார்கழி மாதம் அவிட்ட நட்சத்திரத்தன்று 100 நபர்களுக்கு வாதிகள் அன்னதானம் இட்டு தர்ம காரியங்கள் செய்தார்கள் என்றாலும், அதற்கு முன்பும் தற்போது வரை அவர்கள் தொடர்ந்து தர்ம காரியங்கள் செய்து வருகிறார்கள் என்றாலும், நான் கூறுவது போல் வழக்கிற்காக மட்டும் வாதிகள் தர்ம காரியங்கள் நடத்தவில்லை என்றால் சரியல்ல. 2014ல் வாதிகள் தர்ம காரியங்கள் நடத்தி கொண்டிருந்த போது நான் அதை தடுத்து தகராறு செய்தேன் என்றால் சரியல்ல, அந்த இடத்திற்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை, நான் ஒருபோதும் தடுத்ததில்லை. தாவா தாக்கல் செய்யும் முன்பு வாதிகள் அனுப்பிய

அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பி உள்ளேன். தாவா சொத்துககள் அனைத்தும் வா.சா.ஆ-1 உயில் ஆவணப்படி வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. ஆதியில் தாவா சொத்துக்களுக்கு பட்டா எண்.20 என இருந்தது என்றால் சரியல்ல, பட்டா எண்.1379 மற்றும் 1380 ஆக இருந்தது. பட்டா எண்.1379, 1380 க்கான பட்டா மாறுதல் உத்தரவு எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

7. நான் தாக்கல் செய்துள்ள பி.வா.சா.ஆ-1 உயில் ஆவணத்தில் பட்டா எண்.20 குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நான் அதை கவனிக்கவில்லை. பி.வா.சா.ஆ-2 மற்றும் பி.வா.சா.ஆ-3 ஆவணங்களிலும் அந்த சொத்திற்கான பட்டா எண்.20 என காட்டப்பட்டுள்ளது என்றால் அதை நான் கவனிக்கவில்லை. நான் பட்டா எண்.20க்கான பட்டா எண்ணை தாக்கல் செய்யவில்லை என்றால் அந்த பட்டா எனக்கு தெரியாது. எனது தாத்தா கிரையம் வாங்கியதாக சொல்வதால் அ வரது பெயரில் ஏற்பட்டதாக சொல்லப்படும் பட்டா பாஸ் புத்தகம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பட்டா பாஸ் புத்தகத்தினை பார்த்ததால்தான் அவர் பெயரில் எதன் அடிப்படையில், எந்த பட்டா எண்ணிலிருந்து அவருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டது என்று தெரியவரும் என்றாலும், அந்த சங்கதியை மறைக்கும் வகையில் நான் எனது தாத்தா பெயரில் உள்ள பட்டா பாஸ் புத்தகத்தினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-16 இறப்பு சான்றிதழ் எனது தந்தையின் இறப்பு சான்றிதழ். எனது தந்தையின் வாரிசு சான்றிதழ் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)